# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2109 - 2019 පෙබරවාරි මස 01 වැනි සිකුරාදා - 2019.02.01

*2109 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 222 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 236 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

221-81491-5403(2019/02)

# பதவிகள் - வெற்றிடம்

## புத்தளம் பிரதேச சபை

*வடமேல் மாகாண சபை அரச சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புத்தளம் பிரதேச சபையின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்*

*புத்தளம் பிரதேச சபையில் நிலவும் வெற்றிடங்களுக்காக கீழ்க் காணப்படும் விபரங்களைக் குறித்த ஆரம்ப (தேர்ச்சி நிலை அற்ற) மற்றும் ஆரம்ப தேர்ச்சி வகையில் உள்ள பதவிக்காக வடமேல் மாகாணத்தின் மதிப்பிற்குரிய ஆளுநரால் 2008.11.19 மற்றும் 2009.05.12 ஆந் திகதிகளில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட புத்தளம் பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 03 வருட காலங்களுக்கு மேற்பட்ட காலப் பகுதியில் நிரந்தர வசிப்பைக் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| பதவி | சேவையின் வகை | ஆட்சேர்ப்பின் தரம் | ஆட்சேர்ப்பின் அடிப்படை | ஆட்சேர்ப்பின் எண்ணிக்கை | சம்பள முறைமை |
|---|---|---|---|---|---|
| சாரதி | ஆரம்ப தேர்ச்சி நிலை (PL 3) | III | நிரந்தர | 01 | ரூபா 25,790.00-10X 270 -10X300-10X330-12X350 ரூபா 38,990.00 |
| அலுவலக ஊழியர் உதவியாளர் | ஆரம்ப (தேர்ச்சி நிலை அற்ற) (PL 1) | III | நிரந்தர | 02 | ரூபா 24,250.00-10X 250-10 X270 -10X 300-12 X330 ரூபா 36,410.00 |
| சுகாதார ஊழியர் | ஆரம்ப (தேர்ச்சி நிலை அற்ற) (PL 1) | III | நிரந்தர | 01 | ரூபா 24,250.00-10X 250-10 X270 -10X 300 -12 X330 - ரூபா 36,410.00 |

**சாரதி பதவிக்கு அவசியமான தகைமைகள் :**

*கல்வித் தகைமைகள் :*

- க. பொ. த (சா. தர) பரீட்சையில் இரண்டு தடவைகளில் குறைந்த பட்சம் 02 பாடங்களில் சாதாரண சித்தயுடன் 06 பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்ந்த) குறைந்த பட்சம் ஒரே தடவையில் 05 பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- வாகன சாரதியாக 3 வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.
- Hondor 34 இற்கு மேற்பட்ட கனரக வாகனம், கனரக டேலர் மற்றும் பேரூந்து வண்டியில் பயணிகள் 32 இற்கு மேற்பட்டோரை கொண்டு செல்வதற்கான அனுமதியை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறமை பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல். (A வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரம்)

**அலுவலக ஊழியர் உதவியாளர் பதவிக்கு அவசியமான தகைமைகள் :**

*கல்வித் தகைமைகள் :*

- க. பொ. த (சா. தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களிலாவது சித்தி பெற்றிருக்க வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்த்து)

**சுகாதார ஊழியர் பதவிக்கு அவசியமான தகைமைகள்**

1. அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் க. பொ. த (சா. தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களிலாவது சித்தி பெற்றிருக்க வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்த்து)

**குறித்த சகல பதவிகளுக்கும் அவசியமான வேறு தகைமைகள் :**

1. சகல விண்ணப்பதாரிகளினதும் வயது எல்லை 18 – 45 இற்கு இடைப்பட்டதாகக் காணப்படல் வேண்டும். (தற்போது வடமேல் மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிகளில் சேவையாற்றும் நபர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை கிடையாது.)
2. விண்ணப்பதாரரி பரம்பரையாக அல்லது பதிவின் மூலமாக இலங்கையராக இருத்தல் வேண்டும்.
3. நன்நடத்தை உடையவராகவும் மன ரீதியாக மற்றும் உடல் ரீதியாக ஆரோக்கியமானவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தண்டனைச் சட்ட விதிகளின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.
5. புத்தளம் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 03 வருடகால வதிவிடத்தை உறுதிப்படுத்தி கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழானது பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.
6. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண சபையின் அரச சேவையில் சேவை புரிபவராயின் அவர் விண்ணப்பப் படிவம்ட ஏற்றுக் கொள்ளும் திகதியில் கடந்த 5 வருட காலத்திற்குள் எச்சரிக்கை தவிர தண்டனை பெற்றிருத்தல் கூடாது, கடந்த 5 வருடகாலத்திற்குள் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.
7. விண்ணப்பப்பத்திரம் கோரப்பட்ட பின்பு அல்லது கோரப்படுகின்ற காலப் பகுதிக்குள் அல்லது குறித்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் அல்லது குறித்த வெளியீட்டை செல்லுபடியற்றதாக்குதல் அல்லது திருத்தம் செய்வது போன்றவற்றுக்கான அதிகாரம் புத்தளம் பிரதேச சபை செயலாளரின் உரிமையாகும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

அமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சை மற்றும் உரித்தாகுகின்ற தொழிற்பயிற்சித் திறமைமையை உறுதிப்படுத்தும் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். தற்போது சேவையாற்றும் நிரந்தர/ அமய/ தற்காலிக/ ஒப்பந்த உடன்படிக்கை அடிப்படையிலான சபையின் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

**சேவையில் இணைப்பதற்கான நிபந்தனைகள் :**

குறித்த நிரந்தர பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் 03 வருட காலப்பகுதி வரை தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். அக் காலப்பகுதியில் வழங்கப்படும் கடமைகளை நிறைவேற்றல், வரவு ஒழுங்கு மற்றும் நன்நடத்தை போன்றவற்றில் திருப்திப்படுத்தல் தொடர்ந்து காணப்படுவதோடு தகுதிகாண் கால முடிவில் சேவையில்/ பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்/சுற்றுநிருப நிபந்தனைகளுக்கு அமைய விதவைகள் அநாதைகள் ஓய்வு நிதியக் கொடுப்பனவுக்கான குறித்த தொகையைச் செலுத்த வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரம் அனுப்ப வேண்டிய ஒழுங்கு முறை :**

சகல விண்ணப்பதாரிகளும் கீழே காணப்படுகின்ற மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை 2019.02.15 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக "செயலாளர், புத்தளம் பிரதேச சபை, மதுரங்குளி" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்பத்திரம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்க இருக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ்வரும் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டியதோடு மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ்;
(ii) அடையாள அட்டையின் நிழற் பிரதி;
(iii) கல்வித் தரச் சான்றிதழ்;
(iv) தொழில் தேர்ச்சி திறமை/தொழில் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்;
(v) பதவிக்கு உரித்தான சாரதி அனுமதிப் பத்திரங்கள்;
(vi) பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன் கூடிய கிராம சேவையாளரின் சான்றுறுதிப் பத்திரம்;
(vii) குறித்த சாரதிப் பதவிக்கு அமைய 03 வருடங்களுக்கு மேலதிக அனுபவத்திற்கான சேவை சான்றிதழ்;
(viii) நீங்கள் தற்போது ஏதேனும் அலுவலகமொன்றில் சேவை புரிபவராயின் அவ் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட சேவைச்சான்றிதழ்.

எச். ஜே. எம். எம். எஸ். ஜயசுந்தர,
செயலாளர்,
புத்தளம் பிரதேச சபை.

புத்தளம் பிரதேச சபை அலுவலகம்,
மதுரங்குளி,
2019, பெப்புருவரி 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**புத்தளம் பிரதேச சபை**

வடமேல் மாகாண சபை அரச சேவையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கமைய புத்தளம் பிரதேச சபையின் ........................................................................ பதவிக்கான ஆட்சேர்ப்பு

(கீழ்க்காணப்படும் அவசியமற்ற பந்திகளை வெட்டி விடவும்)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்/ஆங்கிலத்தில்) :...........................................................................

2. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர் (தமிழில்/ஆங்கிலத்தில்) : ...........................................................................

3. முகவரி
   (i) தனிப்பட்ட முகவரி :...........................................................................
   (ii) அலுவலக முகவரி :...........................................................................

4. தொலைபேசி இலக்கம்
   (i) தனிப்பட்ட இலக்கம் :...........................................................................
   (ii) அலுவலக இலக்கம் :...........................................................................

5. பிறந்த திகதி : ..............................................................
   2018.12.01 அன்று வயது : வருடங்கள்: ..................... மாதங்கள்: ......................நாட்கள் : ...........................

6. தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

7. பால் (ஆண்/பெண்): ...........................................................................................

8. கல்வித் தகைமை : ................................................................. ....................................
   க. பொ. த. (சா.த.) பரீட்சையின் சான்றிதழ் (முதலாம்/இரண்டாம்/மூன்றாம் அமர்வுகளில்)
   சுட்டெண் : ................................................ வருடம் : ................................................
   மொழி மூலம் : ................................................

| | தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|
| (i) | .................................................. | .................................................. |
| (ii) | .................................................. | .................................................. |
| (iii) | .................................................. | .................................................. |
| (iv) | .................................................. | .................................................. |
| (v) | .................................................. | .................................................. |
| (vi) | .................................................. | .................................................. |
| (vii) | .................................................. | .................................................. |
| (viii) | .................................................. | .................................................. |
| (ix) | .................................................. | .................................................. |
| (x) | .................................................. | .................................................. |

க. பொ. த (உ.த.) பரீட்சையின் சான்றிதழ்
சுட்டெண் : ............................................ வருடம் : ............................................
மொழி மூலம் : ............................................

| | தோற்றிய பாடங்கள் | தரம் |
|---|---|---|
| (i) | ............................................ | ............................................ |
| (ii) | ............................................ | ............................................ |
| (iii) | ............................................ | ............................................ |
| (iv) | ............................................ | ............................................ |

9. தொழில் தகைமைகள்/அனுபவம் :
..................................................................................................................
..................................................................................................................
..................................................................................................................

10. தற்பொழுது பணி புரிபவராயின் அது தொடர்பான விபரம் :
நிறுவனத்தின் பெயர் : ............................................
பதவி மற்றும் தரம் : ............................................
நியமனம் பெற்ற திகதி : ............................................
தொழிற்தகைமைகள் : ............................................

11. இவ் விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டிருக்கும் சகல தகவல்களும் என் அறிவிற்கு எட்டியவரை உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இங்கு குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு தகவல் பிழையாக அல்லது பொய்யாகக் காணப்படின் ஆட்சேர்ப்பு செய்யப்பட முன்னர் நான் தகுதியற்றவன் ஆவேன் எனவும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயின் நியமனம் நிராகரிக்கப்படக் கூடும் எனவும் நான் அறிவேன்.

திகதி :- ............................................ ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

12. அலுவலகத் தலைவரின் உறுதிப்படுத்தல்.
(தற்பொழுதும் அரச சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கானது)
இவ் விண்ணப்பப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி ............................................ அவர்கள் ............................................திகதியிலிருந்து இவ் அலுவலகத்தில் பணிபுரிகின்றார் எனவும், அவரின் வேலை, வருகை மற்றும் ஒழுக்கம் என்பன திருப்தியாக காணப்படுவதோடு மேலே காணப்படும் 01 தொடக்கம் 10 வரையுள்ள பகுதிகளில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இக் காரியாலயத்தில் காணப்படும் விபரங்களுக்கு அமைய நான் தனிப்பட்ட ரீதியில் பரீட்சித்த முறையில் சரியானவை எனவும் இவர் இப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது சேவையாற்றும் பதவியிலிருந்து விடுதலை செய்ய முடியும் /முடியாது எனவும் 2019 .................. மாதம் .................. ஆந் திகதியன்று இவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதியளிக்கிறேன்.

திகதி - ............................................ ............................................
அலுவலகத் தலைவரின்/பதில் உத்தியோகத்தரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

02 - 288

**ஹொரண நகர சபை**

**மேல் மாகாண அரச சேவையின் வெற்றிடங்களை நிரப்புதல்**

ஹொரண நகரசபையில் தற்சமயம் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரிய தகைமைகளுடைய மேல் மாகணத்தினுள் நிரந்தர வதிவிடமுடையவர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஹொரண நகரசபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவிடமுடைய விண்ணப்பதாரிகளுக்கும் ஏற்கனவே தற்காலிக, அமய மற்றும் பதிலீடு அடிப்படையில் சேவையாற்றும் விண்ணப்பதார்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்.)

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் அ.சு.நி. 03/2016 இன் பிரகாரம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 01 | நிலையப் பொறுப்பு அதிகாரி (செயற்பாட்டு / தீயணைப்பு/ பயிற்சி). | 01 | RS - 04 - 2016<br>ரூபா 37,030.00-24X660-ரூபா 52,870.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம், ஆங்கிலம் இரசாயனவியல் மற்றும் இன்னும் 06 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>மற்றும்<br><br>லண்டன் தீயணைப்பு பொறியியல் நிறுவனத்தில் ஆரம்ப பரீட்சையில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>மற்றும்<br><br>தொழில்சார் தீயணைப்பு படையொன்றில் / சேவையொன்றில் தீயணைப்பு விடயங்கள் பற்றி 10 வருடங்களுக்கு குறையாத அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் 05 வருடங்கள் மகிழ்ச்சிகரமான சேவையொன்றை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.<br><br>மற்றும் வெளி விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தினுள் 03 வருடங்கள் நிரந்தர வதிவிடம் கொண்டவராய் இருத்தல். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் அ.சு.நி. 03/2016 இன் பிரகாரம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 02 | விளையாட்டு மைதான மேற்பார்வையாளர் | 01 | MN - 01 - 2016<br>ரூபா 27,140.00-10X300-11 X 350-10X495-10X660-ரூபா 45,540.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் 02 பாடங்களில் திறமைச் சித்திகள் அடங்களாக ஒரே அமர்வில் 06 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்த பட்சம் 01 பாடத்தில் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.) |
| 03 | சுகாதார மேற்பார்வையாளர் | 01 | MN - 01 - 2016<br>ரூபா 27,140.00 -10X300-11X350- 10X495-10X660-ரூபா 45,540.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் 02 பாடங்களில் திறமைச் சித்திகள் அடங்கலாக ஒரே அமர்வில் 06 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்த பட்சம் 01 பாடத்தில் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 04 | அலுவலக வேலை உதவியாளர் | 02 | PL1 - 2016<br>ரூபா 24,250.00-10X250-10X270- 10X300-12X330-ரூபா 36,410.00<br>(03 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைதிறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.) | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்) |
| 05 | காவலாளி | 03 | PL 1 - 2016<br>ரூபா 24,250.00-10X250-10X270- 10X300-12X330-ரூபா 36,410.00<br>(03 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சை) | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்) |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் அ.சு.நி. 03/2016 இன் பிரகாரம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 06 | சுகாதார தொழிலாளர் | 07 | PL 1 - 2016<br>ரூபா 24,250.00-10X250-10X270- 10X300-12X330-ரூபா 36,410.00<br><br>(03 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சை) | 08 ஆம் தரம்/ 09 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**02 ஆட்சேர்ப்பு முறை :**

(i) நிலையப் பொறுப்பு அதிகாரி (செயற்பாட்டு/தீயணைப்பு/பயிற்சி) சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் விளையாட்டு மைதான மேற்பார்வையாளர் பதவிகளுக்காக எழுத்துமூல பரீட்சை நடாத்தப்பட்டு அதில் அதிகூடிய புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதன் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(ii) அ.வே.உ./ காவலாளி/ சுகாதார தொழிலாளர் பதவிகளுக்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**03 இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 03 வருடங்கள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு

- ❖ நிலையப் பொறுப்பு அதிகாரி (செயற்பாட்டு/ தீயணைப்பு/ பயிற்சி) இற்காக 25 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- ❖ சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் விளையாட்டு மைதான மேற்பார்வையாளர் பதவிகளுக்காக 18 வயதிற்கு குறையாதவர்களாவும் 30 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- ❖ அ.வே.உ. /காவலாளி /சுகாதார தொழிலாளர் பதவிகளுக்காக 18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(v) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட அல்லது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து விலக்கப்பட்டவராக இருத்தலாகாது.

**04. சேவையில் அமர்த்தலுக்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும்.

(ii) இந்த நியமனம் 03 வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்.

(iii) அரச கரும மொழிக் கொள்ளைக்கு ஏற்புடையவாறு இருத்தல் வேண்டும்.

(iv) விதவைகள் அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

**05.** இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக்குறிப்பு, திணைக்களக் கட்டளைகளுக்கு மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு, ஹொராண நகர சபை மூலம் காலத்துக்கு காலம் விடுக்கிப்படுகின்ற கட்டளைகளுக்கு ஏற்புடையவாறு செயற்படுவதற்கும் நியமனதாரர் உடன்பட வேண்டும்.

**06. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை :-**

விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவங்களை பூர்த்திசெய்து "செயலாளர், ஹொரண நகர சபை, ஹொரண " எனும் விலாசத்திற்கு 2019.02.20 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பப்படிவத்திலும் விண்ணப்பம் அடங்கும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையிலும் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :**

(i) பிறப்புச் சான்றிதழ்;
(ii) கல்விச் சான்றிதழ்கள்;
(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் கையொப்பம் அடங்கலான கிராம அலுவலரின் சான்றிதழ்;
(iv) அண்மையில் பெறப்பட்ட நற்குணம் பற்றிய சான்றிதழ்கள் இரண்டு;
(v) ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்;
(vi) சேவை அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படும் வேளையில் இந்த ஆட்சேர்ததலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் இவ்வறித்தலை இரத்துச் செய்தல் போன்ற சகல அதிகாரங்களும் ஹொரண நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

வை. பீ. மஹேன்த்ர,
செயலாளர்,
ஹொரண நகரசபை.

ஹொரண நகர சபை அலுவலகம்,
2019, சனவரி 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹொரண நகரசபை**

மேல் மாகாண அரச சேவையின் ....................................................... பதவிக்கான விண்ணப்பபடிவம்

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : .....................................................
(ii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : ..................................................................
2. நிரந்தர விலாசம் : ..........................................................................
3. தொலைபேசி இல. : ..............................................................
4. நிரந்தர வதிவிட மாவட்டம் : ...........................................................................................
5. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |
6. பால் (ஆண் /பெண் ) : ......
7. (i) பிறந்த திகதி : .......................................................
(ii) 2019 ....... ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ........................ மாதங்கள் : ...............நாட்கள்: .................

8. இலங்கைப் பிரசையா ? ஆம் என்றால், பரம்பரையிலா ? பதிவினாலா ? ....................................................

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரம் : ............................................

10. தொழிற்துறை தகைமைகள் (சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்) :

11. சேவை அனுபவம் ........................................................

12. ஏனைய தகைமைகள் : ...........................................................................

13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?....................................................

14. இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தளவில் உண்மையானவையும் பிழையற்றவையும் என உறுதிமொழிகிறேன். இந்த ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான தகவலொன்று வழ்ங்கப்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைத்துகொள்ள முன்னர் தகுதியற்றவனாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

திகதி : ..............................

..............................
விண்ணப்பதாரரியின் கையொப்பம்.

02 - 292

---

**தொடங்கொட பிரதேச சபை**

பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரல்

தொடங்கொட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக உரிய தகைமைகளுடைய மேல் மாகாண சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளக் குறியீட்டு இல. | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | சுகாதார ஊழியர் | 01 | PL 01 | பொ.நி.சுற். 3/2016 இற்கு ஏற்ப ரூபா 24,250.00-10X250-10X270 -10X300-12X330 ரூபா 36,410.00<br>III ஆம் தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர் வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சை உண்டு. | 8 ஆம் வகுப்பு (9ம் ஆண்டு) சித்தி<br>**உடற்றகுதி :**<br>பதவியில் சேவையாற்றக்கூடிய உடற் தகுதி மற்றும் மனோநிலை இருத்தல் அவசியம். |
| 02 | காவற்காரர் | 02 | PL 01 2016 | பொ.நி.சுற். 3/2016 இற்கு ஏற்ப ரூபா 24,250.00-10X250-10X270 -10X300-12X330 ரூபா 36,410.00<br>III ஆம் தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர் வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சையுண்டு. | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு 02 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி. (இதில் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.<br>**உடற்றகுதி :**<br>பதவியில் சேவையாற்றக்கூடிய உடற்றகுதி மற்றும் மனோநிலை இருத்தல் அவசியம். |

**01. தேவையான வேறு தகைமைகள்:**

(i) விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 03 வருடங்கள் மேல் மாகாண எல்லைக்குள் நிரந்தரமாக வசித்து வந்தவராக இருத்தல் வேண்டும்.
(iv) விசேட குணநலச் சான்றுள்ளவராக இருத்தல் அவசியம்.

**02. ஆட்சேர்ப்பு முறை- நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்**

*சுகாதார ஊழியர்*

| புள்ளிகள் பெற்றுத் தரும் பிரதான தலைப்பு | அதிகூடிய புள்ளி களின் அளவு | தேர்வுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதிகுறைந்த புள்ளி |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிருக்கும் காலம் (வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்) | 15 | 50 |
| பதவிக்குத் தகுந்த அனுபவம் சம்பந்தமான வேறு சான்றிதழ்கள் | 05 | |
| சர்வதேச மற்றும் தேசிய அளவில் தற்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான சாதாரண அறிவு | 75 | |
| திடகாத்திரம் | 05 | |

*காவற்காரர்*

| புள்ளிகள் பெற்றுத் தரும் பிரதான தலைப்பு | அதிகூடிய புள்ளி களின் அளவு | தேர்வுசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதிகுறைந்த புள்ளி |
|---|---|---|
| சேர்த்துக் கொள்ளப்படும் போது அடிப்படைக் கல்வித் தகைமைகளுக்குப் புறம்பாக வேறு ஏதேனும் கல்வித் தகைமைகள் | 20 | 50 |
| சர்வதேச மற்றும் தேசிய அளவில் தற்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான சாதாரண அறிவு | 75 | |
| திடகாத்திரம் | 05 | |

**03. பதவியிலமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனானதுமாகும்.
(ii) விதவைகள், அனாதைகள்/தபுதாரர் நிதிக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
(iii) இப்பதவி 03 வருட கால தகுதி காண் காலத்தைக் கொண்டது.
